**2018-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 06-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு பவானி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் கூட்டப்பொருட்கள் விபரம்**

1.நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 24641/பி3/ 2016 நாள்: 17.03.2018-ல் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 216-17 -ல் ரூ.55.59 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 11 மயானப்பகுதியில் நுண் உர மையம் கட்டும் பணிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மேற்கண்ட பணிக்கு 04.12.2018 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

ஒப்பந்ததாரர் திருவாளர் ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன்ஸ்(பி) லிட் மற்றும் திருவாளர் ஸ்ரீ முனியப்பன் கன்ஸ்ரக்சன் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது.

அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 05.12.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. ( இலட்சத்தில்) | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன்ஸ் (பி) லிட் | ரூ. 55.59 | மதிப்பீட்டுவிலை விகிதத்தை விட 4.98% அதிகம் |
| 2 | திருவாளர் ஸ்ரீமுனியப்பன் கன்ஸ்ட்ரக்சன் | | மதிப்பீட்டுவிலை விகிதத்தை விட 6.70% அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 4.98% அதிகமாக கொடுத்துள்ள திருவாளர் ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன்ஸ்(பி) லிட் அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 05.12.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் திருவாளர் ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன்ஸ் (பி) லிட் தற்போது உள்ள கட்டுமான பொருட்களின் விலைவாசி ஏற்றம் மற்றும் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் ஏற்கனவே கொடுத்துள்ள விலைவிகிதம் 4.98% சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளபடி செய்து கொடுக்கிறேன் என்று 06.12.2018 அன்று கடிதம் அளித்துள்ளார்கள்.

ஒப்பந்ததாரர் திருவாளர் ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன்ஸ் (பி) லிட் அவர்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.98% சதவீதம் கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டை விட 4.98% சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க திருவாளர் ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன்ஸ்(பி) லிட் அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மேற்கண்ட பணி திட்டபணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் ஏற்படுவதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர்கள் கையேடு பகுதி 1 பாகம் 2.7.2ன்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவினத்தை ( 4.98% சதவீதம் ) பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1240/2016/இ1)

2.பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவின் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு அரசு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் மற்றும் துணை இயக்குநர், பொதுசுகாதாரப்பணிகள் அவர்களின் மூலமாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் ஆகியவைகளை பொது மக்களுக்கு கொண்டு செல்லவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நகரில் அவ்வப்போது இதுசம்பந்தமான பிளக்ஸ் போர்டுகள் தயார் செய்து தேவைக்கு ஏற்ப விநியோகம் செய்து பணி மேற்கொள்ள ஏற்கனவே நகர்மனற் தீர்மான எண்: 110, நாள்: 15.05.2018ன் படி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி விகிதம் வழங்கிய ஏ.ரவிக்குமார், பிளக்ஸ் போர்டு சப்ளையர், 601, மேட்டூர் மெயின்ரோடு, பவானி அவர்களால் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை ஏ.ரவிக்குமார், பிளக்ஸ் போர்டு சப்ளையர், 601, மேட்டூர் மெயின்ரோடு, பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.27/-(சதுரடி ஒன்றுக்கு)-இல் 31.03.2019 வரை தொடர்ந்து பணி மேற்கொள்ளவும் அதற்காகும் கூடுதல் செலவினம் ரூ.50,000/-ற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு:–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3. பவானி நகராட்சியில் உள்ள 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 35 பணியாளர்களை (DBC Workers) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்: 217/2017/எச்1, நாள்: 30.10.2018 இன் படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.368/-(ESI and EPF உட்பட) என்னும் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பணியாளர்களை வழங்க உத்திரவிடப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியாளர்களை 01.04.2018லிருந்து தொடர்ந்து பயன்படுத்தி பணி மேற்கொள்ளப்பட்டு வருவதன் பயனாக பவானி நகராட்சியில் 2018ஆம் ஆண்டில் எந்தவொரு நபரும் டெங்கு நோயினால் பாதிக்கப்படவில்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்தகாலம் எதிர் வரும் 31.12.2018ம் தேதியுடன் முடிவடையும் நிலையில் பார்வை 3ல் காணும் M/s Trustus Outsourcing Solutions Pvt, Ltd, Chennai அவர்களின் 03.12.2018ஆம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒப்பந்த காலத்திற்கு பின்பு அதே ஒப்பந்த விலை விகிதமான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.368/- EPF, ESI உட்பட 31.03.2019 வரை தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து உள்ளார்.

இந்நிலையில், பார்வை 3இல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் DBC பணியாளர்களின் எண்ணிக்கை முழுவதனையும் பற்றாக்குறையின்றி வருடம் முழுவதும் பணி மேற்கொள்ள பயன்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே, நகரின் பொது சுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், மேற்படி ஒப்பந்த காலத்தினை 31.03.2019 ஆம் தேதிவரை நீட்டிப்பு செய்து நோய் தடுப்பு பணிகளை தொடர்ந்து நல்ல முறையில் மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.11.60 இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

நோய் தடுப்பு பணியின் அவசியம் கருதி மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

(ந.க.எண்.217/2017/எச்1)

**2018-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 5.00 மணிக்கு பவானி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் கூட்டப்பொருட்கள் விபரம்**

1. இந்நகராட்சியில் சாலையோர வியாபாரிகள் ( வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை ) துணை விதிகள் -2018 என்ற தலைப்பில் அறிவிப்பு விளம்பரம் தினத்தங்திெ நாளிதழில் 11.10.18 இல் வரப்பெற்றது. தினத்தந்தி நாளிதழில் வரப்பெற்ற அறிவிப்பிற்கு Advertisement Agency யான Sathya Agency க்கு தொகை ரூ.5141/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. அனுமதிக்கலாம்
2. விளம்பர கட்டணம் ரூ. 5141/- ஐ பொது நிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1333/2018/இ1)

2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17018/2018/குவ1 நாள்: 23.08.2018-ல் சாதாரண குடிநீர் 20 லிட்டர் குடிநீர் ரூ.7.00 ற்கு அதாவது ஒரு லிட்டர் 35 பைசா என்ற விலையில், குளிர்ந்த குடிநீர் ஒரு லிட்டர் ரூ 1/- விலையிலும் வழங்க அறிவுறுத்தப்பட்டு அதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Ward No. | Description | Rate to be remitted to the municipality (Rupees per 20 litre) | Rate to be charged for sale to public (Rupees per 20 litre) | Rate be charged for scale to public (Rupees per 1 litre from chilling machine |
|---|---|---|---|---|---|
| 1 | 1,3,6,7,8, 13,14,15, 16,17,18, 21,22,23, 25,26 and 27 | Establishment of 1000 Litre / Hr Capacity community drinking water system through Reverse Osmosis with UV treatment at Seventeen locations in Bhavani Municipality under PPP mode. | ரூ.1.00 | ரூ.7.00 | ரூ.1.00 |

ஒப்பந்ததாரர் M/s Apex Associates, Erode அவர்கள் 20 லிட்டர் சாதாரண குடிநீர் ரூ.7.00 ற்கும், குளிர்ந்த குடிநீர் ரூ.1.00ற்கும் மற்றும் விற்கப்படும் குடிநீரில் 20 லிட்டருக்கு ஒரு ரூபாய் நகராட்சிக்கு செலுத்தவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி , நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி விலை அளித்துள்ள திருவாளர் Apex Associates, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

3. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1முதல் 27 வரையிலான பகுதிகளில் நீருந்து குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள் மற்றும் உடைப்பு, பழுதுகளை சரி செய்ய வேண்டி உள்ளது. தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் விநியோகம் பகுதிகளில் ஏற்படும் கசிவுகளை அவ்வப்போது சரி செய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2018-19ஆம் நிதி ஆண்டிற்கு (மார்ச் 2019 முடிய) ரூ.1.50க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் பணியை மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2080/2018/இ1)

4. இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-17 ( SBM) -ன் கீழ் வார்டு எண். 4 உரக்கிடங்கில் நுண் உரமையம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது இப்பணியில் மேலும் அபிவிருத்தி பணிகள் செய்ய மண்டல செயற்பொறியாளர் திருப்பூர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அவ்வாறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.6.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

5. இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-17 ( SBM) ன் கீழ் வார்டு எண். 11 மயானத்தில் நுண் உரமையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியில் மேலும் அபிவிருத்தி பணிகள் செய்ய மண்டல செயற்பொறியாளர் திருப்பூர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அவ்வாறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.6.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2018-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 5.00 மணிக்கு பவானி நகர்மன்றத்தின் சாதாரண கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் கூட்டப்பொருட்கள் விபரம்**

1. பவானி நகராட்சியில் உள்ள 12769 சொத்துவரி விதிப்புகளில் 11502 வரி விதிப்புகள் குடியிருப்பு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குடியிருப்புகளின் இன்றைய நாள் வரை 5007 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5000 குடியிருப்புகள் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு ஏற்றதாக உள்ளது.

புதிய குடிநீர் இணைப்பு வழங்க ஏற்புடையதாக உள்ள அனைத்து குடியிருப்புகளும் இந்நகராட்சி பகிர்மானக்குழாய் முதல் வீட்டின் உட்புறம் வரை குழாய் அமைத்து ( Internal pumping flow control value and meter) மற்றும் தேவையான உபகரணங்கள் பொருத்தி இணைப்பு வழங்கி அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை நகராட்சி மூலம் வழங்க மதிப்பீடு ரூ.171.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. டுபிட்கோ நிறுவனத்தின் மூலம் வட்டியில்லா கடனாக வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2153/2018/இ1)

2. பவானி நகராட்சியில் அரசாணை எண். 101 (ந.நி.கு.வ.துறை) நாள் 30.04.1997ன் படி தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும், ஆனால் இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களின் எண்ணிக்கை 86 ஆகும். தற்போது மேற்படி மொத்த பணியிடங்களில் 32 பணியிடங்கள் காலியாக உள்ளது.

குறியீட்டின்படி தேவைப்படும் 177 துப்புரவு பணியாளர்களில் தற்பொழுது 54 நிரந்தர துப்புரவு பணியாளர்களும், தனியார் மூலம் Outsourcing முறையில் 60 பணியாளர்களும் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் 63 துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் அத்தியாவசிய துப்புரவு பணிகளான வீடு, வீடாக குப்பைகள் சேகரம் செய்தல், தெரு கூட்டுதல், சாக்கடை சுத்தம் செய்தல், பொதுக்கழிப்பிடம் சுத்தம் மற்றும் இதர பொது சுகாதார பணிகள் நகர் முழுவதும் முழுமையான அளவில் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பற்றாக்குறை துப்புரவு பணியாளர்கள் 63 எண்ணிக்கை பணியாளர்களை Outsourcing முறையில் ஒப்பந்த அடிப்படையில் எடுத்து பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்: K.Dis.No:28369/J3, Date: 04.12.2018-ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, பொது சுகாதார நலன் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்கள் நிர்ணயித்த ஊதிய (Collectrate Rate) விகிதமான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.434/- என்னும் ஊதிய

விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி (Collectrate Rate) ஒப்பந்த அடிப்படையில் Outsourcing முறையில் பணியாளர்களை ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**இதற்கான செலவின கணக்கீடு பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| 1 | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு கூலி ரூ.434/– வீதம் 63 நபர்களுக்கு 365 நாட்களுக்கு | ரூ.99,79,830/- |
| 2 | Statutory boards & பணியாளர்களுக்கு அடிப்படை வசதிகள், நிர்வாக செலவினத்திற்கு செலுத்த வேண்டிய சதவிகிதம் பின்வருமாறு | |
| 3 | ESI 4.75% | ரூ.4,74,042 |
| 4 | EPF 13.00% | ரூ.12,97,378 |
| 5 | General Insurance Rs.550/- per person per month 63 persons | ரூ.34,650/- |
| 6 | நிர்வாக செலவினம் (Administrative charges 5%) | ரூ.4,98,992 |
| 7 | Uniforms (Rs.2875 x 63) approximately | ரூ.1,81,125 |
| 8 | Safety measures (Rs.3250 x 63) approximately | ரூ.2,04,750 |
| | **ஆக மொத்தம்** | **ரூ.1,26,70,767** |
| | **Rounded Off** | **126.71 lakhs** |

மேற்கண்ட கணக்கீட்டின்படி 63 துப்புரவு பணியாளர்களை வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் விநியோகிக்க (Outsourcing basis) திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விடுக்கவும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கு வைத்தும் அதற்கான செலவினம் ரூ.126.71/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2255/2015/எச்1)

**3**. Office of the Assistant Commissioner of GST & Central Excise. Erode II Division C.No V/30/16/2018. 87.Adj dated 19.04.2018 -ல் வரப்பெற்ற Statement of demand No. 14/2018 ன் படி 01.04.2015 முதல் 30.06.2017 வரை சேவை வரித் தொகை ரூ.28,82,515 செலுத்த கோரியதன் பேரில் ஆடிட்டர் ஆர்.விஷ்ணு பிரகாஸ் C.A.அவர்கள் வசம் கோப்பு ஒப்படைக்கப்பட்டு இப்பொருள் தொடர்பாக. சம்மந்தப்பட்ட துறைகளுக்கு எதிர்வாத அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்த வகையில் தொகை ரூ.37000/-

வழங்கக் கோரியுள்ளார். மேற்படி தொகையினை ஆடிட்டர் ஆர். விஷ்ணுபிரகாஸ் C.A. அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1021/2009/அ2)

4. இந்நகராட்சியின் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்வதற்காக வரப்பெற்ற சுயமதிப்பீட்டு படிவங்களை கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு உள்ளூர் கணினி 0நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பெயர் | படிவம் 1-க்கு தொகை |
|---|---|---|
| 1 | I.T. Infrastructure, Erode | 4.25 |
| 2 | Interfaces, Salem | 4.75 |
| 3 | GoldSoft Computer, Komarapalayam | 4.00 |

டிமேற்காணும் விலைப்புள்ளிகளின் வரிசை எண். 3-ல் உள்ள Gold Soft Computer நிறுவனத்தின் தொகை குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட அவசர அவசியத்தின் காரணமாக மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1214/2018/அ1)

5. பவானி நகராட்சியின் திட்டப்பணிகள் மற்றும் திட்டப்பணிகள் சம்பந்தமான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் " நாளிதழில்" விளம்பரம் செய்த விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | நாளிதழ் விபரம் | விளம்பர விபரம் | பட்டியல் எண்/ நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | "Accord, Advertising Agency சென்னை | 1390/2018/E1, Dt: 22.11.2018 Notice "EOI" | AAA/0933/18-19 Dt: 26.11.18 | ரூ.36,383/- |
| 2 | "Sathiya Agency" The dailythanthi, Erode. | 1390/2018/E1, Dt: 22.11.2018 Notice "EOI" | 23678 dt. 23.11.18 | ரூ.6426/- |
| 3 | "மக்கள் குரல்" Erode | 1333/14/H1 Dt. 01.03.2018 DAY -NULM | MADO70804017 Dt. 03.03.2018 | ரூ.9475/- |
| 4 | Golden Advertising & Publicity Chennai. | 1240/2016/E1 Dt.22.08.2017 | DIPR 3665 Dt. 23.08.2017 | ரூ.18850/- |
| | | 952/2017/E1, Dt. 09.11.2017 | DIPR4673 Dt.14.11.2017 | ரூ.36,590/- |

மேற்படி விளம்பரக்கட்டணத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மேற்கண்ட விபரப்படி நாளிதழ்களுக்கு பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். (ந.க.எண்.2011/2018/ இ1)

6.பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20, பழைய பஞ்சாயத்து ரோடு பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான அனுசியா பிரசவ விடுதி கட்டிடத்தை பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2140/2018/இ1)

7. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசுக்களை கட்டுப்படுத்தி டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க 2019-2020 ஆம் நிதி ஆண்டில் தேவையான எண்ணிக்கையில் DBC பணியாளர்களை Outsourcing முறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி கொசுக்களால் பரவும் தொற்று நோய்களை கட்டுப்படுத்திட ஆகும். உத்தேச செலவினம் ரூ.48.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. பொது சுகாதாரப்பிரிவின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. Domestic Breading Checkers ( DBC) பணியாளர்களை Outsourcing முறையில் ஈடுபடுத்திட ஒப்பந்தப்புள்ளி வாயிலாக பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 17018/குவ1, நாள்: 23.08.2018 தேதிய கடிதத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34 அறிவிப்பு எண்.14-ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்களை தேர்வு செய்து நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க அனைத்து வார்டு பகுதிகளிலும் Automatic vending centre அமைக்க நகர்மன்ற தீர்மான எண். 248, நாள்: 31.08.2018 அன்று ஒப்புதல் வழங்கியதன் பேரில் இரண்டாம் கட்டமாக 17 இடங்களில் அமைக்க 10.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி (Expression of Interest (EOI) ) கோரப்பட்டது. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. M/s Apex Associates Erode - Offline மூலம் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது
2. M/s Water life India Private Ltd., Hyderabad Offline மற்றும் Online மூலம் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s Apex Associates, Erode அவர்களின் Technical Bid மட்டும் தகுதி வாய்ந்ததாக இருந்தது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உறை 18.12.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டது.